4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 168/2023** **நாள்: 22.01.2026** **வா.சா.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துராமசந்திரமூர்த்தி | தொழில் | : | விவசாயம் |
| த/பெ | : | துரைசாமி | கிராமம் | : | வேடப்பட்டி |
| வயது | : | 41 | தாலுகா | : | மடத்துக்குளம் |
| | | | மாவட்டம் | : | திருப்பூர் |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, முதல் விசாரணை -**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 3வது சாட்சி ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆன கடனுறுதி சீட்டில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான், அதில் எழுதியதும், சாட்சியுமாக கண்ணன் என்பவர் கையொப்பமிட்டுள்ளார். மேற்படி கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகை பிரதிவாதி முத்துராயப்பனுடையது. மேற்படி கடனுறுதி சீட்டில் அடித்தல் திருத்தல் எதுவும் இல்லை.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN

Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.01.22 14:34:44 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.